Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0–1–6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5–0–0 / வெளிநாடு ரூ. 7–0–0

மாலை 19 } ஈரோடு 9–2–1946 தைமீ 27உ { மலர் 18

## "தபசைக் கலைக்கவந்த மோகினிகள்"

### பெரியாரின் ஆராய்ச்சி உரை

[26, 27-1-46ல் திருநெல்வேலியில் நடைபெற்ற, நெல்லை மாவட்ட 3-வது திராவிடர் கழக மாநாட்டின் திறப்புரை: சென்றவாரத் தொடர்ச்சி]

★

"சமுதாயத்தில் திராவிடர்கள் ஆரியர்களோடு எவ்விதத்திலும் சம்மந்தப்பட்டவர்கள் அல்ல என்று மேலே சொன்னேன். உண்மையில் திராவிடர்கள் ஆரியர்களை எதோ அவர்களுடைய திராவிடர்களுடைய பழக்கத்தால் ஆரியர்களை தங்களவர்கள் என்று கருதினாலும், ஆரியர்கள் திராவிடர்களை தனிப்பட்ட சமுதாயத்தினர்களாகவே கருதுகிறார்கள். ஆரியர்கள் பேசுவது தமிழேயானாலும், வாழ்வது தமிழ் நாட்டிலேயானாலும், வடமொழியிலும், அன்னிய மொழியிலும் இருக்கும், பற்றும் வடநாட்டாரிடம் இருக்கும் மரியாதையும், அன்பும் பற்றுதலும் திராவிடரிடம் இருப்பதே இல்லை. ஒரு ஆரியன் யாராவது ஒரு திராவிடனோடு சமமாகப் பழகுவானேயானால், அதை ஒரு பெரிய தியாகமாகவும், ஒரு புரட்சிகரமான காரியத்தை தான் செய்தவனாகவும் கருதுகிறானே தவிர, மனிதத்தன்மை என்று கருதுபவனைக் காண்பது, மிக மிக அருமையேயாகும். வருணாச்சிரமத்தில் நம்பிக்கையில்லாத ஆரியன் இல்லையென்றே சொல்லலாம். வருணாச்சிரமத்தில் நம்பிக்கை கொண்டவன் வருணத்தில் தாழ்ந்தவனாக ஆக்கப்பட்ட மனிதனிடத்தில் இயற்கையில் சமத்துவம் காட்ட எப்படி முடியும்? இதற்கு முன் எப்படி இருந்தாலுங் கூட இப்பொழுது இயற்கையாகவே ஒருவரை ஒருவர் எய்க்கவும், ஒருவரிடத்தில் ஒருவர் சயநலம் பெறவுமேதான் ஒற்றுமை காட்டுவதும், கூடிவாழ்வதுமாய் இருக்கின்றதே தவிர, மற்றபடி உண்மை ஒற்றுதலுக்கு இடமில்லாமலே இருந்து வருகிறது.

ஆரியதர்மம் என்பது திராவிடனுக்கு சிறிதும் பொருந்தாதது என்பதை எந்த திராவிடனும் மறுக்க முடியாது.

திராவிட நாடு என்கின்ற உணர்ச்சி எந்த ஆரியனிடத்திலும் இருப்பதாக ஒரு குறிப்பேயில்லை. வடநாட்டானும், நம்நாட்டு ஆரியனும் தங்கள் தனிப்பட்ட சுயநலத்துக்காக நம் நாட்டைப்பற்றி எதாவது பேசுவார்களே தவிர, நம் நாட்டின் பொது நலனுக்கு என்று அவர்களிடம் கிலையுமில்லை, திட்டமுமில்லை. ஆரியம் பெரிதும் நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்திற்கு மேல் குருட்டு நம்பிக்கையையும் மூடபக்தியையும், பரப்புவதைக் கொள்கையாய்க் கொண்டதேயொழிய, பகுத்தறிவைப்பற்றிய சிந்தனையற்றதாகவே இருக்கிறது. பக்தியம் மூட நம்பிக்கையுமே திராவிட மக்களை இழிமக்களாக இருக்கச்செய்து வருகிறது.

திராவிடம் தன் நாட்டைப் பற்றியோ, தன் சமுதாய இழிவைப்பற்றியோ, தான் சுரண்டப்படுவதைப் பற்றியோ, சிறிதளவு உண்மையாய், சிந்திக்க வேண்டுமானால், பயன் தரும்படி, சிந்திப்பதானால் திராவிடன் வேறு ஆரியன் வேறு, திராவிட நாடு வேறு, ஆரிய நாடு வேறு என்று கருதினாலொழிய, உணர்ந்தாலொழிய ஒருநாளும் திராவிடத்தின் இழிவும், குறைவும் நீங்க இடமே ஏற்படாது. "இந்திடன், இந்தியா" என்றும் "வெள்ளையன், பிரிட்டன்" என்றும் எண்ணுவதன் மூலம் திராவிடனுடைய இழிவும் திராவிடன் சுரண்டப்படுவதும் போவதற்கோ போக்க நினைப்பதற்கோ சிறிதாவது இடமிருக்கிறதா, இடமிருந்ததா என்று கேட்கிறேன்.

உலகத்தில் மற்ற நாடுகளின் விழிப்புக்கு எவ்வளவோ சாதனங்கள் ஏற்பட்டு விழித்தெழுந்து, எவ்வளவோ மேன்மை அடைந்திருக்கிற இந்தக் காலத்தில் நம் திராவிட சமுதாயம் என் இந்த இழிநிலையில் இருக்கின்றது? என்பதற்குக் காரணங் கூட தெரியாமல் ஈனவாழ்வு வாழ்ந்துகொண்டு இருக்கின்றது.

திராவிட நாட்டில் குடிபுகுந்த ஆரியன் [பார்ப்பான்] "சுவாமி"யாய் விட்டான். பணம் திரட்டவந்த மார்வாடி "சௌக்கார்" சேட்டு ஆகிவிட்டான். இவர்கள் இருவருக்கும் உதவி செய்வதாக ஒப்பந்தம் பேசிக்கொண்டு ஆட்சி நடத்தவந்த பிரிட்டிஷ்ஷான் "துரை"யாகிவிட்டான். இந்நாட்டுப் பழம் பெருங் குடிமகனான திராவிடனாகிய நாம் சூத்திரன், நாலாம், ஐந்தாம் வருணத்தவன், அடிமை என்ற இழிமகனாக ஆக்கப்பட்டு விட்டோம். நமக்கு என்று ஒன்றுமில்லாமல் செய்யப்பட்டு விட்டோம். இது இனி சிறிதும் சகித்து இருக்கக்கூடிய காரியம் அல்ல. தேசியம், சுயராஜ்ஜியம், சட்டசபை, மகாத்மா, காந்தியார் உபதேசம் என்பவைகளெல்லாம் நம் முயற்சிகளைக் கெடுக்கவந்த (தபசைக் கலைக்கவந்த மோகினிகளேயாகும்) தந்திரங்களேயாகும். உண்மையில் நமக்கு இப்பொழுது முதலாவதாக வேண்டியது, நமக்குள் நாம் ஒன்றுபடுவதேயாகும். அது இல்லாமல் ஒரு அளவும் நம்மால் விடுதலையோ முற்போக்கோ பெற முடியாது. இதற்கு எந்த உருவத்திலாவது, எந்தத் தன்மையிலாவது ஆரியம் இருந்தால் முடியுமா என்று சிந்தித்துப் பாருங்கள். ஆரிய மதம் மாத்திரம் அல்லாமல், ஆரியக் கடவுள் ஆரிய சாஸ்திரங்கள், ஆரியக் கலை, ஆரியமொழி ஆகியவைகள் நம்மைவிட்டு அகன்று ஆகவேண்

டும். ஆரிய மதத்தையும், ஆரிய கடவுளை யும், ஆரிய சாஸ்திரங்களையும் உதறித்தள்ளாதவன் கடுகளவுக்கூட திராவிடனாக இருக்க முடியாது. ஆகவே நாம் நம் காரியத்திற்கே இப்பொழுது போராட வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஒரு காலத்தில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பாக நம்மை அரசாங்கத்தார் நேட்டிவ்ஸ் (Native) சுதேசிகள் என்று அழைத்தார்கள். அப்பொழுது இந்த ஆரியர்கள் நேட்டிவ்ஸ் என்று அழைக்கக் கூடாது என்றும் அது இழிவு என்றும் இந்துக்கள் அல்லது இந்தியர்கள், என்று அழைக்கவேண்டும் என்றும் கிளர்ச்சி செய்தார்கள்.

அதற்குப் பிறகுதான் அரசாங்கத்தாரும் ரயில்வேகாரரும், சுதேச ஆண்கள், சுதேச பெண்கள், என்று இருந்ததை அழித்துவிட்டு இந்து பெண்கள், இந்து ஆண்கள், என்றும் இந்திய பெண்கள், இந்திய ஆண்கள் என்றும் திருத்தி எழுதினார்கள். அது முதல்தான் இந்து இந்திய உணர்ச்சி பரவிற்று. அது போலவே சுமார் 40, 50 வருடங்களுக்கு முன் ரயில் வண்டிகளில் ஐரோப்பியர்களுக்குத் தனி வண்டி ஏற்படுத்தி, வண்டிகளில் யூரோப்பியன், யூரேஷியன் என்றுஎழுதிவைத்தார்கள். அதையும் அப்படி பிரிவினையாக இடம் இருக்கக்கூடாது என்று கிளர்ச்சிசெய்து அதை எடுக்கும்படி செய்தார்கள். அப்படி இருக்கும்போது இந்தக் காலத்தில் பிராமணாள், சூத்திராள் என்கின்ற இடப்பிரிவு, பெயர் பிரிவு, சட்டங்களில் நீதிப் பிரிவு, முதலியவைகள் இருப்பது மாத்திரம் எப்படிநியாயமாகும்? திராவிடம் என்று சொல்வதை வகுப்புத்துவேஷம் என்று பார்ப்பனர்கள் சொல்லுகிறார்கள், ஆனால் இதே பார்ப்பனர்கள் "பிராமணாள் ஒட்டல், பிராமணாள் சாப்பிடும் இடம், பிராமணாள் இருந்து கடவுளை வணங்கும் இடம்" என்றெல்லாம் எழுதி வைத்துக் கொண்டிருப்பது எப்படி நியாயமாகும்.

வடநாட்டிலே நல்ல புண்ணிய க்ஷேத்திரங்கள் என்பவைகளில் கூட சென்று பார்த்தால் ஹரித்துவாரம் முதலிய இடங்களில் ஆரிய நகர், பிராமின் எக்ஸ்டென்ஷன், பிராமணாள் அக்ரஹாரம் என்றெல்லாம் இடம் பிரிவினை செய்து வாழ்ந்து கொண்டிருக்கும் போதும் அவைகளெல்லாம் வகுப்புவாதம் அல்லாமலும், பிரிவினை அல்லாமலும் இருக்கும்போதும் திராவிடம் ஆரியம்என்று சொல்லப்படும் போது எப்படி வகுப்புவாதமாகவோ, பிரிவினையாகவோ ஆகிவிடும் என்று கேட்கிறேன்.

ஆகவே தோழர்களே!

நாம் திராவிடர்கள். நம் நாடு திராவிட நாடு. நம்மை இழிவுபடுத்துகிறவர்கள்

# பொங்கல் நாள்

16-1-46ல் சிதம்பரத்தில் இளைஞர் மன்ற சார்பில் தோழர் அ. சிதம்பரநாதனார் எம். ஏ., பிஎச். டி., தலைமையில் கொண்டாடிய தமிழ்த்திருநாளில் வித்வான் பூவராகவன்பிள்ளை பேசினார்.

o o

14-1-46ல் மன்னார்குடிசுயமரியாதை சங்க சார்பில் தோழர் வி. பி. என்.பாபு அவர்கள் தலைமையில் நடந்த பொங்கல் விழாக்கூட்டத்தில் தோழர்கள் இரா.பாலசுப்பிரமணியன், ஆர். திருஞானம், வை. இளஞ்சேரன் மற்றும் பலரும் பேசினர்.

o o

15-1-46ல் மன்னார்குடியில் தோழர் இராமச்சந்திர அய்யர் தலைமையில் கொண்டாடிய தமிழ்த் திருநாளில் "பாரதிதாசன்" படத்தைத்தோழர் வை. இளஞ்சேரன் திறந்துவைத்தார்.

o o

16-1-46ல் இராசிபுரம் திராவிடர் கழக ஆதரவில் தோழர் ம. கா. வெங்கடபதி தலைமையில் பொங்கல்நாள் கொண்டாடப்பட்டது. தோழர் கரிகாலன், சொற்பொழிவாற்றினார். கிருஷ்ணன்—பாகவதரை விடுதலை செய்யுமாறு கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

o o

கொழும்பில் 14-1-46ல் தோழர் எஸ். பி. பெருமாள் தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். எம். டி. சுப்பையா மற்றும் பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

காஞ்சீவரத்தில் 14-1-46 முதல் 18-1-46 வரை புதிதாய் அமைக்கப்பட்ட பெரியார் பந்தலில் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் தோழர் கீ. இராமானுஜம் தலைமையில் மாணவத் தோழர்கள் பேச்சுப்போட்டி நடைபெற்றது.

மறுநாள் தோழர் ஈழத்தடிகள் பி. ஏ. தலைமையில் தோழர் டி. எஸ். குஞ்சிதம் அம்மையார், எஸ். குருசாமி முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

மூன்றாம்நாள் தோழர் ப. கதிர்வேல் பி. ஏ., பி. எல். தலைமையில் தோழர்கள் சத்தியவாணிமுத்து அம்மையார், புலவர் மா. கோவிந்தனார் முதலியவர்கள் பேசினார்கள்.

நான்காம்நாள் தோழர் காசி வேலாயுதம் பி. ஏ. தலைமையில் தோழர்கள் புலவர் ஆர். சக்கரபாணி, புலவர் மே. வீ. வேணுகோபால் முதலியோர் பேசினர்.

18-1-46ல் தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ. தலைமையில் தோழர்கள் சி. டி. நடராசன் எம். ஏ., பி. எல். சொற்பொழிவாற்றினார்.

தைத்திங்கள் முதல் மூன்று நாட்கள் திராவிடத் திருநாளாகையால் அரசாங்க விடுமுறை நாட்களாக்கவேண்டுமென்றும் என். எஸ். கே., எம். கே. டி. அவர்களைக் கருணைகாட்டி விடுதலை செய்ய வேண்டுமென்றும் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்வதாய்த் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

o o

திம்மாச்சிபுரம் அண் கே. பேட்டை ஷெடியூல்டு கிளாஸ் பெடரேஷன் சார்பில் பொங்கல் விழா 20-1-46ல் தோழர் வி.எம்.பழனிவேல் தலைமையில்நடைபெற்றது. தோழர்கள் எம். சிங்காரம், டி. டி. ராஜன், எம். பி. முருகன், ஜெகதீசன், கோவிந்தன் மற்றும் பலர் பேசினர்.

o o

சென்னை பிரம்மசமாஜக்கட்டிடத்தில் 14-1-46ல் தோழர் என். பி. இராமலிங்கம் பி. ஏ., தலைமையில் கொண்டாடப்பட்ட பொங்கல் விழாவில் தோழர்கள் புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர், ஏ. எஸ். இராஜன் எம். ஏ., அரசு சுந்தரம் முதலியோர் பேசினர்.

o o.

14-1-46 திங்கட்கிழமை நீடாமங்கலத்தில் தோழர் கே. நடராசப்பிள்ளை தலைமையில் பொங்கல் நாள் கொண்டாடப்பட்டது, அவ்வமயம் தோழர்கள் ஆர். சோமசுந்தரம், எஸ்.சரவணன் பி.ஏ. மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர். சந்தனம், பழங்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. ஆதிதிராவிட மக்கள் எல்லோரும் உரிமையுடன் ஒன்றுகூடி பங்கெடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

---

27-1-46ல் திருவண்ணாமலை முஸ்லீம் லீக் 9-வது ஆண்டுவிழா மாபெரும் ஊர்வலத்திற்குப் பின் பாகிஸ்தான் மண்டபத்தில், மௌலானா ஷர்புதீன் சாயபு தலைமையில் நடைபெற்றது. ஆண்டு அறிக்கையும், வரவேற்புப் பத்திரங்களும், வாசிக்கப்பட்ட பின் பல தோழர்கள், பாகிஸ்தான் பிரச்சினை பற்றியும் திராவிடஸ்தான் பற்றியும், விளக்கமாகப் பேசியபின் இரவு2மணிக்குக் கூட்டம் முடிவுற்றது,

---

ஆரியர்கள். நம்மை சுரண்டுகிறவர்கள் ஆரியர்கள். நமது முன்னேற்றத்தை தடுப்பவர்கள் ஆரியர்கள். இதற்கு ஆதரவு அளிப்பது வடநாடும் பிரிட்டனும் என்பன வாகியவைகளை நம் மக்கள் உணர வேண்டுமென்பதற்காகவே திராவிடர் கழகம் என்பதாக நம் ஸ்தாபனத்திற்கு பெயரிடப்பட்டிருக்கிறது. திராவிட நாடு வட நாட்டிலிருந்து பிரிந்துவிடவேண்டும், தனியாட்சி உடையதாகவும், எவ்விதத்திலும் வடநாட்டின் ஆதிக்கம் சம்மந்தம் இருக்கக் கூடாது" என்றும் பேசி மாநாட்டை திறந்து வைத்தார்.

# திருநெல்வேலியில் திராவிடர் கழக மாநாடு

★

திருநெல்வேலி மாவட்ட திராவிடர் கழக மாநாடு 26, 27-1-46ந்தேதிகளில் திருநெல்வேலி டவுன் சந்தைப்பேட்டைக் கருகில் போடப்பட்டிருந்த மாபெரும் "பன்னீர் செல்வம்" பந்தலில் நடைபெற்ற விபரம்:

26ந் தேதி காலை 8½ மணிக்கு செங்கோட்டை பாசஞ்சரில் பெரியார் ஈ. வெ. ரா., தோழர்கள் டி. பி. வேதாசலம், மணியம்மை, சம்பத் முதலியவர்கள் ஜங்ஷனில் ரயில்மேடையில் இறங்கினதும், ஏராளமான கறுப்புச்சட்டைத் தொண்டர்களும், தோழர்கள் ஏ. வி. முத்தையா, கே. எம். பிரமநாயகம், தளவாய் இராமசாமி முதலியார், தூத்துக்குடி நீதிமாணிக்கம், அருப்புக்கோட்டை பழனிச்சாமி முதலியவர்கள் வெற்றி ஒலியுடன் மாலையிட்டு வரவேற்று காரில் தளவாய் இராமசாமி முதலியாருடன் அமரவைத்து பாண்டு மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக மேடை தளவாய் தீர்த்தாரப்ப முதலியார் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள். தோழர்கள் அன்பழகன், ஜனார்த்தனம், ஆ. திராவிடமணி, தவமணி, பாலசுந்தரப்பாவலர் முதலிய, பல தோழர்களும் வந்திருந்தார்கள். அங்கு சிற்றுண்டி முடிந்ததும் நேரே மாநாட்டுப்பந்தலுக்குச் சென்றார்கள். வழியில் முஸ்லிம்தோழர்கள் தங்கள் சங்கங்களின் சார்பாகப் பெரியார் அவர்களை தனியாக அமைத்திருந்த பந்தலில் வரவேற்று மாலை அணிவித்தார்கள். பந்தலில் ஆண்மக்கள் பெண் மக்கள் உள்பட 5000பேர்கள் வரை கூடியிருந்து வெற்றி ஒலி, வாழ்த்தொலியோடு தலைவர்கள் வரவேற்கப்பட்டு, மேடையில் அமரச்செய்ததும், இயக்கப்பாடல்கள் பாடப்பட்டன. பின் கே. ஏ. மணி அம்மையாரால் கொடி உயர்த்தப்பட்டு, பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் மாநாடு திறப்புவிழா ஆற்றப்பட்டு தோழர் ஏ. வி. முத்தையா அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டதும், தலைவர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமை தாங்கித் தலைமையுரை நிகழ்த்தினார். அத்துடன் மாநாடு ஒத்திவைக்கப்பட்டு உணவுக்குப்பின் மாநாடு மீண்டும் கூடி, தோழர் கோயில்பட்டி யூனியன் போர்டு சேர்மன் ஈ. வி. ஏ. வள்ளிமுத்து, சி. டி. நாயகம் அவர்கள் படத்தையும், ஏ. டி. வீரபத்திரப்பிள்ளை, கா. சுப்பிரமண்ய பிள்ளை அவர்கள் படத்தையும், அன்பழகன் திராவிடநாட்டுப் படத்தையும், கே. மதியழகன், என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் படத்தையும், எஸ். வி. டேவிஸ் தியாகராஜபாகவதர் அவர்கள் படத்தை திறந்துவைத்தபின்னர் மாநாடு முடிவுற்றது.

### நகரசபை வரவேற்பு

மாலை 5-30 மணிக்கு திருநெல்வேலி நகரசபை மண்டபத்தில் பெரியார் அவர்களுக்குத் தேநீர் விருந்தும், சேர்மன் காந்திமதிநாதபிள்ளை அவர்களால்



நெல்லை மாவட்ட திராவிடர் கழகத் தலைவரும், மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவருமான தோழர் கே. எம். பிரம்மநாயகம்.

வாழ்த்திதழும் வாசித்தளிக்கப்பட்டவுடன் சேர்மன் அவர்கள் வரவேற்பு விழாவிற்கு வந்திருந்த பிரமுகர்களையும், முனிசிபல் கவுன்சிலர்களையும் பெரியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

### மாணவர் கழகத் திறப்புவிழா

பின் மாலை 6மணிக்குப் பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் மாணவர் தமிழ்க் கழகத் திறப்புவிழா தோழர் சம்பத் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அன்பழகன், ஜனார்த்தனம் முதலியோர் பேசினர். பெரியார், வேதாசலம் முதலியோர் கலந்துகொண்டனர்.

### பொதுக்கூட்டம்

பின் 7-மணிக்குப் பாளையங்கோட்டைமைதானத்தில் தோழர் ஏ. வி. முத்தையா அவர்கள் தலைமையில் பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 10,000த்திற்கு அதிகமான மக்கள் குழுமியிருந்தனர். பெரியார் அவர்கள் சுமார் 2½ மணி நேரம் "நமது நிலையும், அதற்குப் பரிகாரமும்" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினார். இரவு 9½ மணிக்கு நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

### 27–1–46

ஞாயிறுகாலை 9½மணிக்கு மாநாடு ஆரம்பமாயிற்று. கறுப்புப் படைத் தொண்டர்களால் இயக்கப்பாடல்கள் பாடப்பட்டபின், சிறுவன் வீரமணி, தோழர்கள் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்), தவமணிராசன், சம்பத், பெரியார் முதலியவர்கள் பொதுஉடமை, கறுப்புச்சட்டைப் படையின் அவசியம், மாணவர் கடமை, கடவுள், மதம், தற்கால அரசியல் நிலை, என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினர். இடைவேளை உணவுக்காக மாநாடு கலைந்தது.

பிற்பகல் 3-மணிக்கு மாநாடு மீண்டும் துவக்கப்பட்டது. மாநாட்டிற்கு, முனிசிபல் சேர்மன், கவுன்சிலர்கள். மற்றும் பல பிரமுகர்களும் அதிகாரிகளும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. தலைவர் வேதாசலம் அவர்கள் சிறிதுநேரம் தலைமைவகித்து இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் தோழர் எஸ். எஸ். பழனிச்சாமி அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டு அவசரமாகத் திருச்சிக்குப் புறப்பட்டுவிட்டார்.

பின் தோழர் எஸ். எஸ். பழனிச்சாமி தலைமையில் பாவலர் பாலசுந்தரம், தூத்துக்குடித் தோழர் கே. டி. இப்ராஹீம் முதலியவர்கள் பேசியபின் பல கழகங்கள், முஸ்லிம் சங்கங்கள் இவைகளின் சார்பாகப் பெரியாரவர்கட்குக் கறுப்புமாலைகளும், மலர் மாலைகளும், வரவேற்பிதழ்களும் வழங்கப்பட்டன. பின் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன (தீர்மானங்கள் பின்னர் வரும்) பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் இயக்க அன்பர்களுக்கு சில அறிவுரைகள் நிகழ்த்தினார். பின் தலைவர் முடிவுரைகூற, தோழர் கே. எம். பிரமநாயகம் அவர்கள் நன்றிகூற மாநாடு இனிது முடிவுற்றது.

மாநாடு முடிவுற்றதும் தோழர் எஸ். நடராஜன் கருப்புச்சட்டைப் படையின் அவசியத்தைக் கூறி எல்லோரும் படையில் சேரவேண்டுமென்று பேசினார்.

### போர்வாள் நாடகம்

அன்று இரவு தோழர் எம். ஆர். ராதா அவர்களால் 10 மணிக்குப் பெரியார் அவர்கள் தலைமையில் அருப்புக்கோட்டைத் தோழர் பழனிச்சாமி அவர்கள் மேற்பார்வையில் "போர்வாள்" நாடகம்

நடிக்கப்பட்டது. இரவு 3-மணிக்கு நாடகம் முடிவுற்றது. 20000-க்கு அதிகமான மக்கள் குழுமியிருந்தனர். மாநாட்டின் இரண்டுநாள் நடவடிக்கைகளுக்கும், நாடகத்திற்கும் பெண்களும், முஸ்லிம் தோழர்களும் அதிகமாக வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### கடம்பூர்

28-1-46 திங்கள்மாலை 3-மணிக்குப் பெரியார் அவர்களைப் புகைவண்டி நிலையத்திலிருந்து ஊர்வலமாக முக்கிய தெருக்களின் வழியாக ஜார்ஜ் உயர்தர ஆரம்பப் பாடசாலைக்கு அழைத்துச் சென்றனர். பின் மாலை 7-மணிக்குத் தோழர் எஸ். எஸ். பழனிச்சாமி அவர்கள் தலைமையில் அழகாக அமைக்கப்பட்ட பந்தலில் பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர்கள் இ. வி. கே. சம்பத், பாவலர் பாலசுந்தரம், முதலியோர் பேசிய பின், பெரியார் ஈ, வெ., ரா அவர்கள் சுமார் 3-மணி நேரம் "சமுதாய நிலையைப்பற்றி" ஒரு அறிவுரை நிகழ்த்தினார். பின் தலைவர் முடிவுரைக்குப் பின், தூத்துக்குடித் தோழர் பி. எஸ். சண்முகம் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிவுற்றது. கடம்பூர் திராவிடர்கழகத் தோழர்களால் 25 ரூபாய் கொண்ட பண முடிப்பு கறுப்புச்சட்டைப் படைத் தலைவர் தோழர் எஸ். நடராஜன் மூலம் பெரியாரவர்கட்குக் கொடுக்கப்பட்டது.

### தொண்டர்களின் தொண்டு

திருச்சி, மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, முதலிய ஊர்களைச் சேர்ந்த 200 கறுப்புச் சட்டைப்படை வீரர்கள், கறுப்பு உடையுடன், கவாத்துடன் இரண்டு மூன்றுநாட்கள் எல்லா நடவடிக்கைகளுக்கும் முன் நின்று தொண்டாற்றியது மிகமிகக் குறிப்பிடத்தக்கதாகும்.

### உபசாரம்

மாநாட்டிற்குவந்த தலைவர்களுக்கும், முக்கியஸ்தர்களுக்கும், திருநெல்வேலி மேலப் பண்ணை தளவாய் தீர்த்தாரப்ப முதலியார் அவர்களது மாளிகையில் மிக்க உபசாரத்தோடு, மூன்று நாளும், சிறந்த விருந்தளிக்கப்பட்டதானது மிகவும் போற்றுதலுக்கும், நன்றியறிவித்தலுக்கும் உரியதாகும்.

இவைகளையெல்லாம்விட இம்மாநாட்டுப் பணியில் மிக மிக முயற்சி எடுத்து, பெருங் கவலையுடனும், தாராள சிலவுடனும், முன் நின்று, மாகாண மாநாடுபோல் திருநெல்வேலி மாவட்ட மாநாட்டை, மாபெரும் மாநாடாக ஆக்கி, மாவட்ட மக்களின் உள்ளத்தில், பெரும் உணர்ச்சி ஏற்படும் வண்ணம், நடத்திக் கொடுத்த பெருமையில் பெரும்பாகம் தோழர் க. மு. பிரமநாயகம் அவர்களுக்கு உரியதாகும். மற்றும் தூத்துக்குடித் தோழர்களும், மற்றவர்களும், உழைத்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

## நடக்க இருப்பவை

● 10-2-46 காலை 8 மணி முதல் பகல் 1-மணிவரை சென்னை மயிலாப்பூர் கபாலி டாக்கீஸில் நடைபெறும் தென் சென்னை திராவிடர் 1-வது மாநாட்டில் பெரியார் ஈ. வெ. ரா, தளபதி சி. என். எ, தோழர் சி. டி. டி. அரசு ஆகியோர் கலந்து கொள்வார்கள். மாலை 4-மணிக்கு மயிலாப்பூர் மந்தைவெளியிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு மயிலாப்பூர் மரினாபீச்சில் பொதுக் கூட்டம் நடைபெறும். பெரியார், அண்ணாதுரை விரிவுரையாற்றுவார்கள். கூட்டத்திற்கு முத்தையா முதலியார் அவர்கள் குமாரர் எம். சொக்கலிங்கம் எம். எ; எம். எல். தலைமை வகிப்பார்கள்.

● 11-2-46 சென்னை புரசை திராவிடர் கழக சார்பில் மாலை 5-30-மணிக்கு சென்னை எழும்பூர் ஏரியில் தோழர் தங் கருபன் தலைமையில் நடைபெறுங் கூட்டத்தில் பெரியார், அண்ணாதுரை, சனார்த்தனம், நெடுஞ்செழியன் ஆகியோர் சொற்பொழி வாற்றுவார்கள்.

● 17-2-46 ஞாயிறு மாலை சென்னை சிந்தாதிரிப் பேட்டை நேப்பியர்ஸ் பார்க்கில் தளபதி சி.என்.அண்ணாதுரை தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். 'எதிர்கால வேலை' என்பது பற்றி பல தோழர்கள் பேசுவார்கள் எனச் செயலாளர்கள் எ. சங்கரய்யா நெல்லை ரெங்கநாதம் தெரிவிக்கிறார்கள்.

● 15-2-46ல் இராசிபுரம் ராமகிருஷ்ண காபி ஹோட்டலில் தோழர் கே. எம். முத்து தலைமையில் காந்தி புரட்டு என்பது பற்றி பல தோழர்கள் பேசுவார்கள்.

● 12-2-46 சீர்காழி செல்வராசு தையற் கடையில் திராவிடர் கழக அங்கத்தினர்கள் சேர்ப்பதுபற்றி யோசிக்க ஒரு கூட்டம் நடைபெறும். கறுப்புச்சட்டைப் படையில் சேருவோர் கே. எ. குருசாமியிடம் பதிவுசெய்து கொள்க.

● 17-2-46 ஞாயிறு மாலை 5-மணிக்கு திருநெல்வேலி நயினாகுளம் அருகில் இருக்கும் 8. நெ. கட்டிட மேடையில் நெல்லை மாவட்ட திராவிடர் கழக கூட்டம் நடைபெறும். நிர்வாகஸ்தர்கள் வருக!


● 13-2-46மாலை 6மணிக்கு சென்னை பொம்முசெட்டித்தெரு, நெ. 6 இல்லத்தில், சென்னை சுயமரியாதை சங்க நிர்வாக அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெறும். அங்கத்தினர்கள் வருக!

### தென்ஆற்காடு மாவட்ட திராவிடர் கழக 3-வது மாநாடு

24-2-46 ஞாயிறன்று விருத்தாசலத்தில் நடைபெறும். பெரியார், தளபதி அண்ணாதுரை ஆகியோர் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

### மதுரை திராவிட இளைஞர் மாநாடு

24-2-46 ஞாயிறன்று தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையில் மதுரை விக்டோரியா எட்வர்ட் ஹாலில் நடைபெறும். இயக்கத் தோழர்கள் கலந்துகொள்வார்கள்.

நீங்கள் உபயோகித்ததுண்டா?
இல்லாவிடில் உடனே பரீட்சியுங்கள்
ஜெயராம்
காயசுத்தி லேகியம்
இரண்டே வேளையில் குணமளிக்கும்
ஆச்சரிய மருந்து

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அசிரணம், வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, இடுப்புவலி, கைகால்வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், குடல்வாதம், இருமல், நெரிக்கட்டி சுரம், மூலநோய் இவைகளை நீக்கி. மலத்தைப் பிரிக்கும்.

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0. V. P. P. வேறு.

திருச்சிக்கு ஓர் ஏஜண்டு தேவை

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

சோல் ஏஜண்டு: M. E. அப்துல் ரகிமான் சாகிபு,
பெரியகடைவீதி, திருவண்ணாமலை.

# ரகுபதிராகவ ராஜாராம்...!

(கேள்வி—விடை)

கேள்வி:- "தர்மம்கெட்டு அதர்மம் தலைதூக்குகிற போதும், சாதுக்களுக்குத்துன்பம்வந்து, துஷ்டர்கள் இன்பமடைகின்ற காலத்திலும் நான் வருவேன்'' என்றார் கிருஷ்ண பகவான்.

விடை:- "ராஜகோபாலாச்சாரியாருக்குத் துன்பம் வந்து, பிராமணாள்மீது வெறுப்பு ஏற்பட்டு, இராமன், இராமாயணம் ஆகியவைகள் ஒழிக்கப்படப்போகும் சமயத்தில் நான் வந்துவிட்டேன்'' என்கிறார் காந்தியார்.

கே:- அப்படியானால், இவ்வளவு நெருக்கடியெல்லாம், இராமனுக்கும், இராமாயணத்துக்கும் தான் என்று சொல்லு.

வி:- ஆம். "சுயராஜ்யத்துக்கு'' என்னநெருக்கடி? "அதோ இதோ இன்னம் இரண்டுமாசத்திலே வரப்போகிறது சுயராஜ்யம், வந்துவிட்டது சுயராஜ்யம்'' என்று சொல்லப்போகிறார். காந்தீயபக்தர்கள் அதை அனுபவிக்கவும் போகிறார்கள். கஷ்டமான, நெருக்கடியான சங்கதி ராமனுக்கும், ராமாயணத்திற்கும்தான் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஏன் என்றால், தமிழ்ப்பண்டிதர்கள் 100க்கு 99பேர், மகாமகாப் பண்டிதர் கதிரேசன் செட்டியார் முதல், நவீனக் கம்பர் சிதம்பரநாத முதலியார்வரையில், "கம்பராமாயணத்தில் "கலை'' ஒழுகுகிறதே தவிர, அதற்காகத்தான் நாக்கை நீட்டுகிறோமேஒழிய, அதில் பக்தியுமில்லை, கடவுள் சக்தியுமில்லை'' என்பதுஆக சொல்லிவிட்டுத்தான் இராமாயணக்கடை விரிக்கிறார்கள். பார்ப்பனர்களுக்கு, இராமாயணம் பக்திக்கும், கடவுள் சக்திக்கும்தான் தேவையே ஒழிய இந்தக் "கலையும்'' தேவையில்லை; வேறு எந்தக் கலையும் தேவையில்லை. ஆதலால், நெருக்கடி தீர, கிருஷ்ணபரமாத்மாவை அழைத்தார்கள். அவர் "மனித மகாத்மா''வாகவந்து, இராமனைத் துதித்து, இராமனை வரவழைத்து, ராம பஜனை செய்து நெருக்கடி தீர்த்தார். இல்லை, இல்லை தீர்த்துவிடவில்லை. நெருக்கடி தீர்ந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு, தன்னை வரவழைத்தவர்களையும் எண்ணச் செய்துவிட்டுப் போய்விட்டார். தெரிந்ததா?

கே:- தெரிந்தது. ஆனால் காந்தியார் ஒரு அரசியல் தலைவர் என்கின்ற முறையில்தான் வந்தார். இந்திப் பிரச்சார அழைப்புக்கும் வந்தார். இந்த இரண்டும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் ஆகிய இருவருக்கும் சொந்தம். அப்படி இருக்க அவர் பார்ப்பனர் வளையத்திற்குள்ளாக இருந்துவிட்டுப் போன காரணம் என்ன!

வி:- அட, அசடே! அவர் அரசியல் தலைவரென்றால், பார்ப்பன ஆதிக்கத்திற்கு, அரசியலை ஆக்கிக்கொடுக்கும் தலைவரே ஒழிய மற்றபடி பொதுமக்கள் கைக்கு ஆக்கிக்கொடுக்கும் தலைவரல்ல. அரசியல் ஸ்தாபனம், அரசியல் அதிகாரம், அரசியல் மேடை பார்ப்பனர் கையில் இருந்து, பார்ப்பனர் அல்லாதார் கைக்குப் போய் விடுமோ என்கின்ற பயத்தாலே, நடுக்கத்தாலேயே, அவர் வரவழைக்கப்பட்டார். அதற்குஆக வந்தவர், சி. பி.—சீனிவாசசாஸ்திரி, ராஜன்,—ராஜகோபாலாச்சாரி, சி. ஆர். சீனிவாசன்—கே. சீனிவாசன், பாஷ்யம்—பதஞ்சலிசாஸ்திரி, கோபால்சாமி ஐயங்கார்—குப்புசாமி ஐயர் மற்றும் அட்லைசர் ஐயர்—ஐ. சி. எஸ். ஐய்யர், ஐக்கோர்ட் ஜட்ஜ் ஐயர்—அட்வகேட் ஜெனரல் ஐயர் ஆகியவர்களை வளையம் போட்டுக்கொள்ளாமல் ஐயர் அல்லாதவர்களான, சூத்திரர்களான, காமராஜ—முத்துரங்கம், —முத்துராமலிங்கம், ஓமந்தூர்—உபயத்துல்லா முதலாகிய இந்த நபர்களைக்கிட்ட சேர்ப்பார்களா? காந்தி என்ன லேசான மகாத்மாவா? அப்படித்தான் அவர் லேசான மகாத்மாவாக ஆகிவிட்டாலும், அவரை மகாத்மாவாக ஆக்கினவர்கள் லேசான ஆளுகளா? இது தெரியாமல் உளறுகிறாயே!

கே:- அப்படித்தான் இருந்தாலும், அவரைப் பார்க்க இத்தனை ஜனங்கள் எப்படிப்போனார்கள்?

வி:- போடா, போடா, முட்டாளே! இதிலென்னடா அதிசயம்? சுலபத்திலே காணப்படாத வஸ்து எதுவானாலும், அதற்குக் கூட்டம் உண்டு. உதாரணமாக

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

சைன்யவசதி, கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு
உதவி தேவை
ஏனென்றால்

## மே. த. கவர்னரின் யுத்த நிதி

சண்டை காலத்தில் போர்வீரர்களுக்கு எப்படி உதவியதோ, அதேபோல் கடல் கடந்த நாடுகளில் சேவை செய்யும் இந்திய, பிரிட்டிஷ் துருப்புகளின் நலன்களுக்கு இந்நிதி உதவுமேயானால் அதன் உதவி மிகத்தேவை. ஆகவே

தயவுசெய்து தாராளமாகவும், மிக அவசரமாகவும் பணம் கொடுத்துதவவும்

★

எனவே

தயவுசெய்து உங்களது பணத்தை ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள், கஷ்ட நிவாரண சகாயநிதி, c/o இம்பீரியல் பாங்க், இந்தியா முதல் லைன் பீச், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பிக் கொடுக்கவும்.

குடி அரசு

1946-ளு பிப்ரவரிமீ 9-உ

## "உற்பத்தியில் 1/3பங்கு நூல் கைத்தறியாளருக்கு"

இந்தியாவில் நூல் மில்லுகளில் உற்பத்தியாகும் நூல்களில் மூன்றில் ஒருபாகம் நூல் கைத்தறியாளருக்கு கொடுக்கவேண்டும் என்றும், ஒரு ஆண்டுக்கு வெளிநாடுகளுக்கு நூல் அல்லது ஜவுளி ஏற்றுமதி செய்யக்கூடாது என்றும் மத்திய சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இது அமுலுக்கு வருவதானால் ஒரு அளவுக்காவது கைநெசவாளர் கஷ்டம் நீங்கலாம். ஆனால் சர்க்கார் ஏழைகளுக்குஆக ஆட்சி புரியும் சர்க்காராக இருந்தால்தானே இது சரியானபடி அமுலுக்கு வரலாம். நம் சர்க்கார் என்பது, பணக்காரருக்கும் பார்ப்பனருக்கும் பிரதிநிதித்துவமானதாகும். ஏனெனில் மனுதர்மப்படி சர்க்கார்ஆட்சி நடக்கின்றதே அதற்குக் காரணமாகும்.

இந்தத் தீர்மானங்கூட ஒரு முஸ்லிமால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறதேயொழிய ஒருபார்ப்பனராலோ, ஒரு பணக்காரப் பார்ப்பனரல்லாதாராலோ கொண்டுவரப்படவில்லை. ஒரு சாதாரணப் பார்ப்பனருக்கு கஷ்டம் வரும்படியான ஒரு காரியம் இருக்குமானால் அதற்கு 10-தீர்மானங்கள்வந்துவிடும். அதற்கு 100 அநந்த சயனங்கள் துடிதுடிக்கும். ஆனால் பார்ப்பனரல்லாத ஏழைத்தொழிலாளி மக்கள் கோடிக்கணக்கில் துன்பப்படும் இந்த நூல் கஷ்டமான காரியத்திற்கு உண்மையில் இந்த நாட்டில் கேள்வி இல்லை, கேட்பாடு இல்லை.

இந்த இலாகாவுக்கு சர்க்கார் ஏற்படுத்தி இருக்கும் தலைமை அதிகாரி ஒரு பார்ப்பனர். அவரது உதவி அதிகாரிகள் 9-பேரும் பார்ப்பனர். இலாகாத் தலைமை கவர்னர் ஆலோசகரும் பார்ப்பனர். இந்தக் கூட்டத்தார் இந்த நெசவுத்தொழிலாளிகளை நாய்களைப்போல், பன்றிகளைப்போல் நினைத்துக்கொண்டு, இழிவாகவும், கேவலமாகவும் நடத்துவதும், அலட்சியமாய் நடந்துகொள்ளுவதுமான காரியம், இந்தநாடும் இந்த ஆட்சியும் ஆனதினால் பொறுத்துக்கொண்டிருக்கிறதே தவிர வேறு நாடாக இருந்திருக்குமானால் அரைடஜன் ஆகஸ்ட் சம்பவம் நடத்தி மனு ஆட்சியை ஒழித்து வெற்றிபெற்றிருக்கும்.

இந்த நாட்டில் இந்தக்காலத்தில் கைத்தறி ஒன்றுதான் இயந்திரத்தோடு தலைநிமிர்ந்து போட்டிபோடுகிறது. காரணம் அவ்வளவு ஏழ்மையும், உடலுழைப்பு உறுதியுமாகும். அப்படிப்பட்ட கைத்தொழிலைக் கொல்லத்தக்கவிதம் உடலுழைப்பும் ஏழ்மையும் இல்லாத கூட்டத்தவர்களை, இலாக்காத் தலைவர்களாகப் போட்டு ஏழைகளை, கைத்தறியாளர்களை நசுக்கி பட்டினிபோட்டு "சித்திரவதை" செய்வதோடு துணி வாங்குகிறவர்களுக்கும் ஒன்றுக்கு இரண்டாகக் கிரயம் கொடுக்கும்படி செய்வதென்றால் இது எப்படி நல்ல ஆட்சிக்கு அறிகுறியாகும்.

இந்த நாட்டில் பருத்தி ஏராளமாக விளைகிறது. இன்னும் வேற்கடலை வெள்ளாண்மையை சிறிது குறைக்கும்படி செய்துவிட்டால் மேல்நாட்டிற்கும் பருத்தி அனுப்பும்படி வெள்ளாண்மை நடக்கும். அப்படிப்பட்ட நாட்டில் நூல்நூற்கும் முதலாளி கோடிகோடியாய் சம்பாதிக்கவும், கை நெசவு நெய்யும் தொழிலாளி வாரத்திற்கு 2, 3நாட்களுக்குக் கூட கஞ்சி இல்லாமல் திண்டாடவும், துணி வாங்கிக்கட்டும் நாட்டுவாசி ஒன்றுக்கு இரண்டாக விலைகொடுக்கவும், கொடுத்தாலும் துணி இல்லாமல் திண்டாடுவதும் என்றால் இதன் கருத்தென்ன? இதன் அர்த்தம் என்ன? என்று கேட்கிறோம்—பஞ்சு விலைக்கும் நூல் விலைக்கும் ஒன்றுக்கு இரண்டாக மூன்றாக இருக்கிறது. நூல்வாங்கி நெய்கிறவர்கள் கொடுக்கும் விலைக்கும் நூலின் கண்ட்ரோல் விலைக்கும் ஒன்று இரண்டாகிறது. அந்த நூல் அப்படி வாங்கிநெய்த துணியின் விலைக்கும் துணிவாங்கிக் கட்டுகிறவர் கொடுக்கும் விலைக்கும் ஒன்றுக்கு இரண்டு ஆகிறது. இப்படியாக இவ்வளவு தூரம் விலையேறியதும் மக்கள் அதிக விலைகொடுத்து கஷ்டப்பட்டும், நெய்கிறவனுக்கு வயிற்றுக்குப் போதுமான கஞ்சி இல்லை என்றால் அதுவும் சர்க்கார் கண்ட்ரோல் கட்டுப்பாடு ஏற்பாடுசெய்து இதற்குஆக வருஷத்தில் பல லட்ச கணக்கான ரூபாய் ஒதுக்கிவைத்து, இலாகா தலைவருக்கு மாதம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் சம்பளமும் இலாகா சிப்பந்திகளுக்கு பல ஆயிரக்கணக்கான சம்பளமும் செலவுசெய்யப்படுகிறது என்றால் இதையார் தான் நாகரீகமான, நாணயமான அல்லது அறிவுடமை பொறுப்புடமையான ராஜ்யபாரம் என்று சொல்ல முடியும் என்பதை நமக்கு விளக்க முடியவில்லை.

மேலும் உடலுழைப்பாளிகளுக்கு உதவும் இலாக்கா தலைவர், அல்லது உழைப்பாளர் இலாக்கா அதிகாரியாயிருப்பவர், உழைக்காத, ஊரார் உழைப்பை நோகாமல் சுரண்டிவாழும் ஜாதியைச் சேர்ந்தவர் என்றால் இந்த ஆட்சியில் ஏழைமக்கள் எப்படி வாழ முடியும், அவர்களுக்கு விமோசனம் ஏது என்பது நமக்கு விளங்கவில்லை.

இதுவரை சண்டையின் காரணமாக இந்தப் பரிதாபகரமான நிலைமைக்கு என்னதான் சமாதானம் சொல்லப்பட்டு வந்திருந்தாலும் இனி இந்தக்கொடுமை நிலைத்திருப்பதற்கு அவசியம் சிறிதும் இல்லை என்றே சொல்லலாம்.

இந்தக் கண்ட்ரோல் இலாக்காவானது நாம் ஆய்ந்து பார்த்தவரையில், நல்ல அனுபவசாலிகளைக் கலந்து பார்த்தவரையில் கண்ட்ரோல் இலாக்கா அதிகாரிகளுடையவும், சிப்பந்திகளுடையவும் உத்தியோகங்கள் நடந்து வரவும் அவர்களது சுயநல, பதவிகளைப் பொறுத்தும் அவர்களது சொந்த நலம், வரும்படி ஆகியவைகளைப் பொறுத்தும் முக்கியமாய் கவனிப்பதாலேயே அதைக் கலைக்க முடியாமல் இருக்க வேண்டியதாகிறது என்று கருத

வேண்டி இருக்கிறதே தவிர உண்மையில் இதற்கு இன்று வேறு எவ்வித அவசியமும் இருப்பதாய்த்தெரியவில்லை. உதாரணம் வேண்டுமானால் அந்த இலாகாவுக்கு பார்ப்பனர்கள் முக்கிய தலைமை அதிகாரிகளாகவும் சிப்பந்திகளாகவும் இருப்பதை மாற்றி வேறு இனத்தவர்களை வைத்து வேலை பார்த்தால் 15-நாளையில் அந்த இலாக்காவை எடுத்துவிடும்படி சிபார்சு செய்யப்பட்டுவிடும் என்று தைரியமாய்க்கூறுவோம். மற்றமாகாண அதிகாரிகள் இந்த இலாக்கா வேண்டியதில்லை என்ற ஜாடை காட்டியும் இங்கு அதுவும் பருத்தியும் நூலும் ஏராளமாய்க் கிடைக்கும்மாகாணத்தில் இந்த இலாக்கா இருப்பானேன்? இருந்தும் இந்தத் தொழிலாளிகளுக்கு இப்படிப் பட்ட திண்டாட்டமும், இப்படி அதிக விலையும் இருப்பானேன்?

மற்றும் ஒரு விஷயம் சொல்லுவோம். இந்தமாகாணத்தில் கண்ட்ரோல் இலாகா இவ்வளவு தலைவிரித்தாடி தன் இஷ்டம்போல் ஆணவமாய் எதேச்சாதிகாரம் நடத்தியும் அதன் உண்மையான பயன் என்னவென்றால் இந்த மாகாணத்தில்தான் நூல் வியாபாரிகளும் ஜவுளி வியாபாரிகளும் கோடிக்கணக்கான ரூபாய்களைத் தெரிந்த லாபமாக அடையவும், கோடிக்கணக்கான ரூபாய்களை "யாரும் அறியாமல்" திருட்டுப் பணமாக சேர்த்துவைக்கவும் முடிந்திருக்கிறது என்று சொல்லுவோம்.

நிர்வாக அதிகாரிகளிடம் அறிவோ அனுபவமோ நல்ல நடத்தையோ, நேர்மையோ அல்லது திறமையோ நீதியோ இருந்திருக்குமானால் இந்த ஒன்று இரண்டு ஜில்லாக்களில் வியாபாரிகளுக்கு இத்தனைகோடி ரூபாய் லாபமும், இத்தனை கோடிரூபாய் திருட்டுப் பணமும் கொள்ளை அடிக்கவும் கைத்தறி நெசவாளர்கள் வாரத்திற்கு 2நாள்கூட வேலை இல்லாமல் திண்டாடவும், 80ம் நெம்பர் நூல் நெய்பவர்களுக்கு 20ம் நெம்பர் நூலும், 20, 30 நெம்பர் நூல் நெய்பவர்களுக்கு 80, 100 நெம்பர் நூலும் கொடுத்து அதிகாரிகள் விளையாடுகிற தன்மையும், அவை ஒன்றுக்கு இரண்டாய் விற்கப்படுவதும் சில்லரை வியாபாரிகள் நெசவாளிகள் "நாய்கள், கழுதைகள்" போல் மதிக்கும்படியான நிலைமையும் ஏற்பட்டிருக்குமா என்று கேட்கின்றோம்.

யுத்தம் காரணமாக இந்த நாட்டில் இராணுவ ஆட்சியும், பார்ப்பன ஏகபோக சர்வாதிகார சுரண்டல் ஆட்சியும் இருந்துவந்தது ஒரு அளவில் பொறுத்துக்கொள்ளக் கூடியது ஆனாலும் இனி ஏழைகளுக்கு சிறிதாவது பயன்படும் ஆட்சி தோன்றவேண்டியது அவசியமாகும்; மிகமிக அவசிய மாகும்.

---

## தீட்டாயிடுத்து!

---

இந்த ஆண்டு திருவையாற்றில் நடைபெற்ற தியாகராஜ அய்யர் உற்சவத்தில், இசையரசு தண்டபாணி தேசிகர் ஆரம்பத்தில் 'சித்தி விநாயகனே' என்றபாட்டைப்பாடினாராம். அடுத்தபடி கச்சேரி செய்யவந்த அரியக்குடி ராமானுஜய்யங்கார் "தேசிகர் தமிழ் பாடி சன்னிதானத்தைத் தீட்டுப்படுத்திவிட்டார். நான் இந்த மேடையில் பாடமாட்டேன்" என்று கூச்சலிட்டுத் தாம்தோம் எனத் தாண்டிக் குதித்தாராம்.

இது இன்றுநேற்றல்ல, மனுமந்தாதா காலத்திலிருந்து "தமிழ் பாஷை நீச்ச பாஷை" என்றும், "பிராமணாள் ஸ்நானம் செய்துவிட்டு சாப்பிடும்வரை தமிழ் பேசக்கூடாது" என்றும், வீட்டில் விசேஷ காலங்களில் தமிழ் வாயில் நுழையக்கூடாதென்றும் கூறி வந்ததோடு அனுஷ்டானத்திலும் இருந்து வருகிறது. அகத்திலும், அக்கிரகாரத்திலும் இருந்துவந்த இந்த அகம்பாவம் அய்யர்வாள் உற்சவத்திலும் புகுந்துவிட்டது. தமிழ் நாட்டிலே—தமிழர்கள் உயிரோடு வாழும் நாட்டிலே—தமிழர்களுடைய மொழிக்குத் தடையுத்தரவு! ஆங்கில அரசாங்கமல்ல—ஆரிய அரசாங்கத்தின் ஆணை! "தமிழ் மொழியில் பாடியதால் மேடை தீட்டாகிவிட்டது" என்ற ஆணவப் பேச்சு கிளம்பியதற்குக் காரணம் தமிழர்கள் அடிமைகளாக—அனுமார்களாக வாழ்வதுதான். தமிழர் இனம் சூத்திர இனமாகவும், தமிழர் மொழி தீட்டுப்பட்ட மொழியாகவும் போய்விட்டது. தியாகராஜர் திருநாளுக்கு நன்கொடை வழங்கும் முட்டாள் தமிழர்களும், தொண்டர்க்குத் தொண்டராம் சிஷ்யகோடிகளின் வரிசையிலுள்ள அழகப்ப செட்டியார் போன்ற விபீஷணர்களும் உள்ளவரை அரியக்குடிவர்க்கம் அகம்பாவத்தோடுதான் வாழும். அரியக்குடிகள் அங்கலாய்ப்புக்கு அவர் இனபந்து காந்தி மகாத்மா(?)வின் விஜயமும் ஒரு காரணமாகும்.

### நம்பவேண்டாம்

பெரியார் அவர்களின் சொற்பொழிவுகள் தேசிய தினசரிகளில் பெரும்பாலும் திரித்தும் மறைத்தும் கண்டபடி பிரசுரிக்கப்படுகின்றன. எங்கும் பார்ப்பனர்களே நிருபர்களாயிருப்பதே இதற்குக் காரணம். ஆகையால் அவைகளை நம்பவேண்டாம் என்று எச்சரிக்கிறோம். ஒவ்வொன்றுக்கும் சமாதானம் எழுதிக்கொண்டிருக்க முடியாததால் இதை எழுத நேர்ந்தது.

## வேண்டுகோள்

திராவிடர் கழகத்தின் வேலைத் திட்டத்திற்கு 50,000 ரூபாய் நிதி சேர்க்க வேண்டுமென்று கழக நிர்வாக சபை தீர்மானித்து, எங்களை நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுத்திருக்கிறபடியால், நாங்கள் நிதி வசூல் வேலையைத் துவக்கி இருக்கிறோம். ஆகையால் திராவிடர் கழக அங்கத்தினர்களும், திராவிடர் கழக அபிமானிகளும் இயக்கத்தின் சார்பாக இந்நிதி முடிவு பெறும் வரையில் தயவுசெய்து வேறு எந்தவிதமான பணவசூலும் செய்வதின்மூலம் இயக்கத்திற்காகப் பணங் கொடுக்கும் அன்பர்களுக்குச் சலிப்பும், வெறுப்பும் ஏற்படும்படி செய்யாமல் இருக்க வேண்டுமாய் இயக்கத்தோழர்களை வேண்டிக்கொள்கிறோம்.

வசூல் கமிட்டிக்காக:—
ந. அர்ச்சுனன்,
தலைவர்.

# திராவிட மாணவர் மாகாண மாநாடு

23, 24-2-46 சனி, ஞாயிறுகளில்
தஞ்சை ஜில்லா நீடாமங்கலத்தில் டி மாநாடு நடைபெறும்.

முதல்நாள் நிகழ்ச்சிகட்கு, சேலம் கல்லூரித் தலைவர்
தோழர் A. இராமசாமி M.A.,L.T. அவர்கள்
தலைமை வகிப்பார்.

மாநாட்டுத்திறப்பாளர்: S. காந்தம் சுந்தரவடிவேல் அம்மையார் M. Sc.

கொடி உயர்த்துவோர்: லாரண்ஸ் அம்மையார்
(மாணவி அண்ணாமலை நகர்)

பெரியார் ஈ. வெ. ரா., தோழர்கள் எ. சி. பாலசுந்தரம் பி.ஏ.,எல்.டி. சேலம் சொக்கப்பா, சி. என். அண்ணாதுரை எம்.ஏ., மற்றும் மாணவ மணிகளும், பேரறிஞர்களும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆர். இளம்வழுதி, எஸ். சரவணன்,
செயலாளர்கள்.

எஸ். தவமணிராசன்,
வரவேற்பத் தலைவர்.

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் 8-2-46ந் தேதி இரவு ஈரோட்டை விட்டுப் புறப்பட்டு சென்னை சென்று 10-ந் தேதி நடைபெறும் மாநாட்டிலும், மற்றும் பல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு 15-ந் தேதி வாக்கில் ஈரோடு திரும்புவார்.

## கரூர் தாலூக்கா தோழர்கட்கு

கரூர் தாலூகாவில் கறுப்புச் சட்டைப் படையினர்களைச் சேர்க்கவும், திராவிடர் கழகத்திற்கு அங்கத்தினர்களைச் சேர்க்கவும், கிளைகள் நிறுவவும் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர் தோழர் பி. ஷண்முக வேலாயுதம் அவர்களை நியமித்திருப்பதால் அவரிடமே ரசீது புத்தகங்கள், கறுப்புப் படையில் சேரும் விண்ணப்பங்கள் முதலானவைகள் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதி வாரம் ஞாயிற்றுக் கிழமை கரூர் திராவிடர் கழகத்தில் அவரை சந்திக்கலாம்.

முகவரி:—பி. ஷண்முக வேலாயுதம்,
திராவிடர் கழகம், கரூர்

## அறிவிப்பு

புதிய ஆண்டிற்கு உறுப்பினர்கள் சேர்த்துப் பல இடங்களிலிருந்தும் பட்டிகள் வந்துள்ளன. சீக்கிரம் சென்ற ஆண்டைப்போல் குடி அரசில் மாவட்ட வாரியாக உறுப்பினர்கள் எண்ணிக்கை வெளியிடப்படும். புத்தகம் வேண்டுவோர், தலைமை நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## பிரபல திருமணம்

காரைக்குடி நகரசபைத் தலைவர் திரு சி. மு. ரு. நாராயணன் செட்டியார் குமாரர் திரு. முருகப்பனுக்கும், கல்லல் திரு கரு. பெரி. அழ. ரெங்கநாதன் செட்டியார் குமாரி திருமதி சொர்ண வல்லிக்கும், மணமகள் இல்லத்தில தை மீ 22-ந் தேதி சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. உத்தியோகஸ்தர்களும், உறவினர்களும் ஏராளமாக வந்திருந்தனர்.

## கவனிக்க

செய்தி அனுப்பும் தோழர்கள் ஊரின் பெயரையும் தங்கள் கையெழுத்தையும் குறிப்பதோடு சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## பொதுக் கூட்டம்

வேலூர் (வ. ஆ.) திராவிடர் கழகத்தின் சார்பில் 1-2-46-ந் தேதி மாலை 6-மணிக்குக் கோட்டை மைதானத்தில் தோழர். புலவர் கே. கோவிந்தன் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முகவுரைக்குப் பின் பெரியார் ஈ. வெ. ரா. நீண்ட கைதட்டலுக்கிடையே எழுந்து சுமார் 3-மணி நேரம் திராவிடர், திராவிடர் கழகம் முதலியவை பற்றி ஓர் அரிய விளக்கவுரை நிகழ்த்தினார். 10,000க்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். கூட்டம் இரவு 9-மணிக்கு முடிவுற்றது.

## பெரியார் பேட்ஜ்

தலைவர் பெரியார் அவர்களின் உருவம் அமைந்த பேட்ஜ் சேலத்தில் சு. ம. சங்கத்திலும், செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழகத்திலும், திராவிட முடிதிருத்த நிலைய தோழர் எஸ். எஸ். கோவிந்தனாரிடமும் அடக்க விலைக்கு கிடைக்கும்.

## மாணவர் பகுதி

திண்டுக்கல் முனிசிபல் உயர்தரப் பள்ளியில் 5-2-46 மாலை மாணவர் சங்க சார்பில் திராவிட முன்னேற்றம் என்பது பற்றி பல தோழர்கள் பேசினார்கள்.

o o

திருச்சி செயின்ட் ஜோசப் காலேஜில் 1-2-46ல் நடைபெற்ற சொற்போர்க் கூட்டத்தில் நாட்டுப் பிரிவினை வேண்டும் என்பதுபற்றி டி. சபாபதி கருணாகரன் ஆகியோர் பேசினர். நீல கண்டன் எதிர்த்துப் பேசினார். கேள்விக்குப் பதில் சொல்லப்பட்டு பிரிவினையை ஆதரித்து 37 பேரும் எதிர்த்து 25 பேரும் வாக்களித்தனர்.

o o

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 26-1-46ல் நடந்த தமிழ்ப்பேரவை சொற்போர்க் கூட்டத்தில் தோழர் இரெ. தண்டபாணி கொண்டுவந்த 'நாட்டுப் பிரிவினை வேண்டும்' என்ற தீர்மானம் பெருவாரியான வாக்குகளால் வெற்றியடைந்தது. செல்வாக்குக் குறைந்தது கண்ட காங்கரஸ் தோழர்கள் பின் வாங்கினர்:

o o

திருவாரூர் திராவிட மாணவர் கழக 3-வது ஆண்டு நிறைவு விழா 17-2-46 ஞாயிறு காலை நடைபெறும், என்றும் தளபதி அண்ணாதுரை, டி. பி. வேதாசலம், ஈ. வி. கே. சம்பத், இளம்வழுதி, கி. தியாகராசன் ஆகியோர் கலந்து கொள்வார்களென்றும் தோழர் வெங்கடாசலம் அறிவிக்கிறார்.

o o

முத்துப்பேட்டையில் தோழர்கள் எம். கல்யாண ராமன், கே. சாம்பசிவம், எஸ். கோபால கிருஷ்ணன் எ. சதாசிவம், என். எ. நடேசன், சி. மோகன்தாஸ் ஆர். கனகசுந்திரம், எஸ். ஆவுடையப்பன், எஸ். ராமதாஸ் ஆகியோரை செயற்குழு உறுப்பினராகக் கொண்ட திராவிட மாணவர்கழகம் துவக்கப்பட்டிருக்கிறது.

## அழைப்பு

ராஜபாளையம் திராவிடர் கழகக் கட்டிடத்தில் 17-2-46ல் தாலுகாக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். நமது தாலுகாவிலுள்ள இயக்கத் தோழர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆர். பி. பாலையா, செயலாளர்.

## பரிசளிப்பு

சேலத்தில் நாடகம் நடத்திவரும் நாகை திராவிட நடிகர் கழகத்தாருக்கு வரவேற்பும் வெள்ளிக் கோப்பையும் தளபதி சி. என். அண்ணாதுரை தலைமையில் நடந்த சண்ட மாருதம் நாடகத்தின் பொழுது சேலம் சுயமரியாதை சங்கத்தாரால் கொடுக்கப்பட்டது.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியபாளையத்து அம்மன் உற்சவத்துக்கு ஏன் மக்கள் அப்படிப் போகிறார்கள்? அங்கு போய் சுலபத்தில் காண முடியாதக் காட்சியைப் பார்க்கத் தானே? அத்தனைபேருக்கு அம்மன் பக்தியா? அப்படிப்போய்த் தான் அங்கு செய்வதென்ன? இவ்வளவு பெருமைப் படுத்தி மறைத்து வைத்திருக்கும் வஸ்து சுலபத்தில் காணக்கூடியதாக மக்களுக்குத் தோன்றிவிட்டதால், மக்கள் கூட்டம், கூட்டமாகப் போகிறார்கள். கூட்டம் அதிகம் என்றால் என்ன? அதிசயம்தான். ஒரு அதிசயம் என்பதெல்லாம் சுலபத்தில் அடிக்கடி காணமுடியாதகாட்சி என்றுதான் அர்த்தமே தவிர அதில் உயர்தன்மை இருக்கிறதுஎன்று அர்த்தமல்ல. உயர்தன்மை வேறு, அதிசயம் வேறு, உயர்தன்மைக்குக் கூட்டம் இருக்காது. உதாரணமாக ரேடியோ எத்தனை உயர்தன்மை அதிசயம். அதற்கு இதில் 1000ல் ஒரு பங்கு கூட்டம்கூட கிடையாதே, அதுபற்றி சாவகாசமாகப் பேசலாம்.

கே:- இந்த மாதிரி சமயத்தில் ஈ.வெ.ரா.தன் ஆளுகளை ஏவிவிட்டு கலாட்டாச்செய்து ஏதாவது பேர் வாங்குவாரே, இந்தத் தடவை ஏன் வாலடக்கிக்கொண்டார்?

வி:- இதுவேண்டுமானால் புத்திசாலித்தனமான கேள்வி. அவர் தெரிஞ்சேதான் சும்மா இருந்தார். பலபேர் அவரை வேண்டிக்கொண்டும் கூட, அவர் அது, ஒன்றும் கண்டிப்பாக நடக்கக்கூடாது என்று வேண்டிக்கொண்டார். காரணம் என்னவென்றால் ஏதாவது கலாட்டா நடந்திருந்தால் காந்தியார் வரவின் வண்டவாளம் இவ்வளவு வெளியாகி இருக்காது. அப்போ இப்போது, நடந்ததெல்லாம் வேறுவிதமாக நடந்து இருக்கும். இப்போது காங்கரசில் இருக்கும் "சூத்திரர்கள்" எல்லோரும் "நாயக்கர் சொன்னது சரியாய்ப் போச்சு" என்று சொல்லி வருகிறார்கள். கலாட்டா நடந்தால் "நாயக்கரின் சு. ம. கும்பலின் காலித்தனம்" என்று இருவரும் சொல்லுவார்கள். இப்போது "பார்ப்பனர்களின் சூழ்ச்சி வெளியாகிவிட்டது" என்று எங்கும் பேசிக்கொள்ளுகிறார்கள்.

கே:- காந்திஜி பழனியில் மனிதன்மீது (டோலியில்)சவாரிசெய்து கொண்டு கல்லைப் பார்க்கப்போனார். ஆனால் தனக்கு விக்கிரகத்தில் நம்பிக்கை இல்லை என்று வேறே கூறிக்கொள்கிறார். என்ன அதிசயம்?

வி:- மகாத்மாக்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், எதைவேண்டுமானாலும் பேசலாம்.

o o

கே—:கிருஷ்ணபகவான் "உலகத்துக்கு நானே கடவுள்; எனக்குப் பிராமணர்கள் கடவுள்" என்று சொன்னாரே அதன் அர்த்தம் என்ன?.

வி—: அட இது தெரியாதா! காந்தியாரை "மகாத்மா என்று கருதி" சுதேசமித்திரன், தினமணி பத்திரிகைப்படி, "45, அல்லது 46 லட்சம்" ஜனங்கள் அடிபட்டு, மிதிபட்டு போய்ப்பார்த்து இருக்கிறார்கள். ஆனால் காந்தியார் வெகு கஷ்டப்பட்டு மூன்று,நான்குதரம் சீனிவாச சாஸ்திரியாரைப் போய்ப் பார்த்துவந்தாரே; அதன் தத்துவம் என்னவோ, அதுதான் கிருஷ்ண பரமாத்மா "உலகத்திற்கு நான் கடவுள் எனக்குப் பிறாமணர் கடவுள்" என்று சொன்னதின் அர்த்தம். அதாவது உலகத்துக்கு மகாத்மா, காந்தியார்! காந்தியாருக்கு மகாத்மா, சாஸ்திரியார்!

கே—:கனம் சீனிவாச சாஸ்திரியாரைக் காந்தியார்போய்ப்பார்த்ததற்கு மரியாதை செய்யாமல் காந்தியாரைக் கிண்டல் செய்தார். அதாவது "இன்னுமா சர் கோபால்சாமி அய்யங்கார் சூஸ்திரதாரியாய் இருந்து உங்களை ஆட்டிவைக்க வேண்டும்" என்று கேட்டார். அதற்குக் காந்தியார் வெட்கப்படாமல், வருத்தப்படாமல் ஆம் என்று தலையசைத்தார். சிறிது நேரம் மௌனமாகவும் இருந்தார். மற்றொரு முறையும் காந்தியாரை, சீனிவாச சாஸ்திரியார் கிண்டல் செய்தார். அதாவது "உங்கள் பௌண்டன்பேனா காணாமல் போய் விட்டதால் பௌண்டன் பேனாவே இனிமேல் உபயோகப்படுத்துவதில்லையென்று சொல்லிவிட்டீர்களே, நீங்கள் இடுப்பில் கட்டியிருக்கும் கடியாரத்தை யாராவது எடுத்துக் கொண்டு போய் விட்டால் இனிமேல் கடியாரத்தையே உபயோகப்படுத்த மாட்டீர்களாக்கும்" என்று கிண்டல் செய்தார். அதற்கும் காந்தியார் சிரித்துக் கொண்டார். இந்தப்படிக் காந்தியாரைப் பார்ப்பனர் கைப்பிள்ளையென்றும், சர்வமுட்டாளென்றும் கருதும்படியாகக் கேவலப் பேச்சுப் பேசி சீனிவாச சாஸ்திரியார் பரிகாசம்செய்யக் காரணம் என்ன? தைரியம்என்ன?

வி:—அட சனியனே, இது தெரியாதா. கோயில் பூனை தேவர்க்கஞ்சுமா? அர்ச்சகனுக்குச் சாமியிடத்தில் பயமோ, மரியாதையோ இருக்குமா? காந்தியாரை சாஸ்திரிக்கு நன்றாகத் தெரியும். முறைப்படி காந்தியார் சீனிவாச சாஸ்திரிக்கு சிஷ்யனாக வேண்டும். கோகலே காந்தியாருக்குக் குரு. சாஸ்திரி கோகலே பட்டத்துக்கு வந்தவர். அது முதல் காந்தியாரை சாஸ்திரி சாதாரண மனுஷனைப் போலவே நடத்தியதோடு, பல தடவைகளில் மிக்க அவமதிப்பாகவும் பேசியிருக்கிறார். மகாத்மா பட்டத்தைப் பற்றியும், கதரைப் பற்றியும் சாஸ்திரியார் பேசின பேச்சுக்கள் காந்தியார் கடவுளாக ஆனபிறகு கூட செல்லுபடியாக ஆகத்தக்க பேச்சுக்களாகும். ஆகவே அப்படிப் பட்ட, அதாவது தனது ரகசியமெல்லாம், உண்மை சக்தியெல்லாம் தெரிந்த சாஸ்திரியாரிடம் காந்தியார் கோபம் (வால்) காட்ட முடியுமா? யோசித்துப்பார்.

கே:- தென்னாட்டுக்கு வந்த காந்தியார் காமராஜ நாடாரைப் பற்றிக் கவலைப்படாமல், அவருக்கு மரியாதை காட்டாமல் சர் கோபால்சாமி அய்யங்காருக்கும் ராஜகோபாலாச்சாரியாருக்கும் மாத்திரம் இவ்வளவு மரியாதை காட்டி, சீனிவாச சாஸ்திரியார் கேலி பண்ணும்படியான அளவுக்கு நடந்துகொண்டதின் காரணமென்ன?

வி:- அதுவா, "காந்தியார் இங்கு காங்கரஸ் விஷயமாய் வரவில்லை. அதனால் அரசியல் தலைவர்களை லட்சியம் பண்ண

வில்லை" என்று பார்ப்பனர்கள் சொல்லுகிறார்கள்.

குறுக்குக்கேள்வி:- அப்படியானால், மதுரைக்கும் பழனிக்கும் எதற்காகப் போனார்? சுவாமி தெரிசனத்துக்காகத் தானே? அப்படியிருக்க அங்கு போவதற்குக் காமராஜை ஏன் கூட்டிக்கொண்டு போனார்?

வி:- அதற்குக் காரணம் இந்த சனியன் பிடித்த 'குடி அரசு', 'திராவிடநாடு' முதலிய பத்திரிகைகள் பண்ணின தொல்லையினாலே தான்.

கே:- பொதுவாகக் காந்தியார் இந்த சமயம் வந்தது பார்ப்பனர்களுக்கு நல்லதா, கெட்டதா?

வி:- காந்தியார் வந்ததுமுதல் போனது வரை பார்ப்பனர்களுக்கு ஆனந்தந்தான். வெம்பிரமான ஆணவங் கூடத்தான். மற்றும் "இந்தப் பசங்கள் இந்த 7, 8 வருஷமாய்ப் பார்ப்பனர்களையும், புராணங்களையும், சாஸ்திரங்களையும், ராமனையும், கிருஷ்ணனையும், ராமாயணத்தையும், கீதையையும், ராஜகோபாலாச்சாரியையும், ராஜனையும் கண்டபடி திட்டி" நாட்டில் ஒரு வெறுப்பை உண்டாக்கினார்களே, அதெல்லாம் இப்போது காத்தாய்ப் பறந்து போயிட்டுதே, இனி என்ன பண்ணும் இந்த அசடுகள். இதுகளால் என்ன முடியும். குயவனுக்குப் பலநாள் வேலை, தடியடிக்காரனுக்கு ஒரு நாள் வேலை என்பது போல் ஒழிந்தது பிராமணத்துவேஷம், பகவான் துவேஷம், சாஸ்திர துவேஷம்" என்று இறுமாந்து பேசிக்கொள்வார்கள். ஆச்சாரியார்கூட காந்தியார் வந்ததால் கடவுளும் (வருண) தர்மமும் மக்களிடம் பதிந்துவிட்டது என்று அறிக்கை விட்டுவிட்டார். ஆனால் நடக்கப்போவது என்ன தெரியுமோ? இதனுடைய ரீ ஆக்ஷன் (Reaction) கர்மபலன் நிதானமாக நடக்கிற சில காரியங்கள் அவசரமாக நடக்கப்போகின்றன. அவைகளை சீக்கிரம் பார்ப்பனர்களே உணருவார்கள். "நாம் ஏன் இந்தக்காரியம் செய்தோம்" என்று!

வேண்டுமானால் ஒரு இரண்டு மூன்று லட்ச ரூபாய்கள், நம்முடைய பணங்கள் வீணாகப் போயிற்றே, எதிரிகைக்குப் போய் விட்டதே என்று சொல்லலாம். ஆனால் யாருடைய பணம் அவை? நம் எதிரிகளுடைய பணம். சில நாட்டுணர்ச்சி, இனஉணர்ச்சியற்ற சுயநலக்காரர் பணம். சில மடையர்களுடைய பணம். சில என்றென்றும் நமக்குப் பயன்படாதவர்களுடைய பணம். இந்தப் பணங்கள் போய்விட்டதால் நமக்கொன்றும் நட்டமுமில்லை லாபமுமில்லை. இந்தப்பணங்களைக் கொண்டு நம் எதிரிகள் நமக்கு ஏதாவது கெடுதி செய்துவிடுவார்களோ என்று நாம் அஞ்சவேண்டியதுமில்லை. இந்தப் பணங்கள் மாத்திரம் அல்ல, இதுபோல் இன்னும் பத்துப்பங்குப் பணம் நம் எதிரிகளிடம் இருந்தாலும், திராவிட இளைஞர்களின் உள்ளத்தையும், வீரத்தையும், அவர்களது பரிசுத்த ரத்தத்தையும், அணுவளவு கூட மாசுபடுத்தவும் முடியாது. மேலும் மேலும் கிளப்பவும், பரிசுத்தப் படுத்தவுந்தான் முடியும். ஆகலால் பயம் வேண்டாம். காந்தி வரவு எதிரிகள் பணியும் காலத்தை மிக சமீபத்தில் ஆக்கிவிட்டது.

## இவருக்கு அவர் சிபார்சு!

கேள்வி:- கல்யாணசுந்திரமுதலியார் அவர்கள், ஏன் பெரியபுராணத்திற்குச் சிபார்சு செய்தவண்ணம் இருக்கிறார்?

விடை:- அடமடையா! அவர் பெரியபுராண ஆசிரியர், பெரியபுராணப் பண்டிதர், பெரியபுராணப் புது உரை ஆசிரியர், பெரியபுராணப் பிரசாரகர் இதுமாத்திரமா? பெரியபுராண அச்சகச் சொந்தக்காரர். இவ்வளவு மாத்திரமா? பெரியபுராண விற்பனையாளர். அப்படிப்பட்ட அவரைப்போய், அவருக்குப் பெரியபுராணத்திலே ஏன் பித்து என்கிறாயே? நீ பித்தனா? அவரா? அவர் பெரியபுராண வியாபாரியாக்கும் நினைப்பிருக்கட்டும். அவரை அப்படி, இப்படி அழுக்குமூட்டை என்று பேசிவிடாதே!

கே:- ஓஹோ அப்படியா சரி, இராமாயணத்திற்கு ஏன் சிபார்சு செய்கிறார்? அதில் எல்லாம் இருக்கிறது என்கிறாரே?

வி:- அடே, அடிமண்டே! பார்ப்பனரால் பிரத்தியட்சக் கம்பர் என்று பட்டம் சூட்டப்பட்ட, சிதம்பரநாத முதலியார் புதுசாக்கிய கம்ப ராமாயணத்தைக் கல்யாணசுந்திர முதலியார் தானே பிழை திருத்தி அச்சிட்டார்; அவர் தானே விற்கிறார். ஒரு முதலியார் சங்கதியே முன்னையது ஆனால் இரு முதலியார் சேர்ந்த சங்கதி எப்படியிருக்கும்? அதிலே எல்லாம், இல்லாமல் எதுதான் தப்பித்துக்கொள்ளும்?

---

## கவி. பாரதிதாசன் இசைப் போட்டி

சிதம்பரம் இளங்கோ மன்றத்தினாதரவில் 24-2-46 ஞாயிறு மாலை 4 மணி வரையில் சிதம்பரம் செட்டியார் உயர்நிலைப் பள்ளி நடு மன்றத்தில் நடைபெறும். போட்டியாளர்களாக இதில் யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம். முன்னணி பின்னணி என இரண்டு பிரிவாகவுள்ளது 14 வயதுக்கு மேற்பட்டோர் முன்னணியினர். போட்டிக்குரிய பாடல்கள் புரட்சிக் கவிஞர் இசையமுதிலிருந்தும் பொறுக்கப்பட்டவை.

முன்னணி முதற்பரிசு ரூ 20. இரண்டாவது பரிசு ரூ 10 பின்னணி முதற்பரிசு ரூ 10 இரண்டாவது பரிசு ரூ 5.

மற்ற விபரங்களுக்கு கா. மு. மாணிக்கம் தமிழாசிரியர் சிதம்பரம் என்ற முகவரிக்கு எழுதுக.

ஆடூர் ஆர். நடராசன், தலைவர், இளங்கோ மன்றம்

## சர்க்கரை இல்லை

சேலம் அன்னதானப்பட்டி மிட்டாய்த் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்த 30 குடும்பங்களுக்கு அவர்களது வாழ்க்கைத் தொழிலாகிய மிட்டாய் செய்ய சர்க்கரை கிடைக்காது இன்னலுறுவதால் அதிகாரிகள் கவனித்து ஆவனசெய்யுமாறு சங்கக் காரியதரிசி ஏ. எஸ். பழனியப்பா வேண்டுகிறார்.

---

## மணமகள் தேவை

பொன்மலை தென்இந்திய ரெயில்வேயில் மாதம் 30-ரூபாய் வருமானம் 35-வயதுள்ள நாயுடு வகுப்பைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகள் எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி; விதவையாக இருந்தாலும் சரி. விபரத்திற்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதவும்.

முகவரி;

G. பாங்குசாமி,
D 21/11
பொன்மலை.

# கருணை காட்டி விடுதலை செய்க

ஈரோடு வைத்திய வள்ளல்
ஈ. வெ. கிருஷ்ணசாமி

நமது தமிழ் நாட்டில் உள்ள மக்கள் பெரும்பாலும் ஏககண்டமாக (ஏகமனதாக) திரு. கிருஷ்ணன் பாகவதர் இவர்களைக் கருணைகாட்டி விடுதலை செய்ய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் இதற்கு எதிர்ப்பாக யாரிடமிருந்தும் வந்ததாகக் காணவில்லை.

மக்களெல்லோரும் ஏகோபித்துக்கோரும் மன்னிப்பை இவ்விரண்டு நடிகமணிகள் விஷயத்தில் அளிக்க சர்க்கார் மவுனம் சாதித்து வருகின்றார்கள்.

மக்கள் பகலெல்லாம் ஜீவனத்துக்கு உழைத்து அலுத்துப் போவதற்கு சாந்தியாக சற்று அவர்கள் அலுப்புசிரமம் தீர்ந்து மனதிற்கு நிம்மதியாகவும் ஊக்குவிக்கவும் மகிழ்ச்சியடையச் செய்யவும் சாயந்திர நேரங்களில் உல்லாசத்துக்கும் பயன்படும்படியாக, சிங்காரத் தோட்டங்களும் அதன் மத்தியில் ரேடியோக்கள் மூலம் இன்னிசைகளுடன் வாழ்க்கைக்குதவும் பற்பல அறிவாளிகளின் சொற்பொழிவுகளும் அமைக்கும் ஷை பொது ஸ்தாபனங்களுக்கு உத்திரவும்அதற்காகும் சிலவுகளில் ஒரு பகுதியும் ஷை ஸ்தாபனங்களுக்கு உதவியும் வருகிறார்கள் இப்படி எல்லாம் இந்தப் பண நெருக்கடியான யுத்த காலத்திலும் கூட ஷை காரியங்களுக்கு தடையில்லாமல் உதவி வருகிறார்கள்.

மக்கள் சலிப்பாற சற்று உல்லாசமாக காலங்கழிக்க இரவில் நாடக சினிமாக்களுக்கும் சென்று தாங்கள் தங்கள் பொருள்களைச்சிலவழித்துச்சென்று பார்த்து களிக்கிறார்கள். இதற்கும் கூட ஷைநடிகமணிகள் மிக மிக இன்றியமையாத அறிவாளிகள், திறமை சாலிகள் என்பதும் சர்க்கார் அறிந்த விஷயமாகும். சுமார் ஒரு வருடகாலம்வரை நமது மக்கள் ஷை நடிகமணிகள் நடித்து காட்டக்கூடிய நாடகமோ சினிமாவையோ பார்த்தானந்திக்காமல் அதேஏக்கமாகவிருக்கிறார்கள். ஆனால் சர்க்கார் இவர்கள் விஷயத்தில் கொஞ்சம் கருணை காட்டினால் மக்கள் மனத்துயரமும் நடிகமணிகள்சிறைவாசத்துயரமும் தீருவதற்காக சர்க்கார் இந்த நடிகமணிகள் விஷயத்தில் கருணைகாட்லாம் அதனால் சர்க்காருக்கு எவ்வித நஷ்டமும் இராமல் மக்களுக்கும் அவர்கள் கேட்டதைக் கொடுத்ததாக ஏற்படுகிறது சர்க்காருக்கும் எல்லாம் சட்டபடிக்கேதான் செய்யப்படும் என்கிற அபிப்பிராயமிருக்குமானால் இவர்களின் கருணைக்கு வேலை என்ன இருக்கிறது. தங்களிடம் வேலைக்கில்லாத கருணை எதற்காக இருப்பதாக, - மக்களும் மற்றவர்களும் கருதுவதாக இருக்கவேண்டும்.

ஆனால் நீதியும் அமைதியும் சட்டமும் நாட்டில் நடைபெற வேண்டாமா? என்கின்ற கேள்வி பிறக்கலாம். நீதியும் அமைதியும் நடைபெறவேண்டியே சட்டம் ஏற்படுத்தி இருக்கிறதென்பது உண்மையும் அவசியமுமானதுதான். சட்டத்தில் குற்றம்செய்தவனை தண்டிக்கவேண்டியதுதான். எதற்காக சட்டத்தில் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதென்பதையும் இச்சமயத்தில் ஆலோசனைசெய்ய வேண்டியதும் ஆகும்.

குற்றவாளிக்குத் தண்டனை விதிப்பதானது குற்றவாளி தன் குற்றத்தை உணர்வதற்கும் இனிமேல் குற்றம் செய்யாதிருக்கவும், குற்றம் செய்யாத மற்ற மக்களும் ஏதாவது குற்றம் செய்ய நேரும் சமயம் வாய்க்கும்போது அம்மக்கள் குற்றம் செய்யாமல் நடந்து கொள்வதற்காகவே ஒழிய, செய்த குற்றம் மறுபடியும் நேராக மாறுவதற்கல்ல. உதாரணமாக கொலை செய்தவனை தூக்கிலிடுவது கொலையுண்டவனை மறுபடி பிழைப்பிக்கவல்ல. நெருப்பு வைத்தவனைத் தண்டிப்பது, நெருப்பில் வெந்த பொருள்கள் மீண்டும் தன் பழய நிலையை அடையவல்ல. அடித்தவனை தண்டித்தல் அவ்வடிகள் மறைவதற்கல்லவென்பதே தண்டனையின் உள்கருத்தாக ஆகும்போது இப்பிரபல அறிவிற்சிறந்த நாடக மணிகள் விஷயத்திலும் தண்டனையின் தத்துவத்தை உபயோகித்துப் பார்க்கும்போது இவ்விருவரும் தாங்கள் எதற்காக சிறைப்பட்டார்களென்பதை உணரமாட்டார்களா? இனியும் அப்படிப் பட்டவைகளைச் செய்ய இச்சிப்பார்களா வென்பதை யோசித்தால் எவருக்கும் இவர்கள் விஷயத்தில் செய்யமாட்டார்கள், நன்றாக உணராமலிருக்க மாட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டிய அவ்வளவு அறிவாளிகளாவார்கள். ஆகையால் இப்படிப்பட்ட யோக்கியதையுடையவர்கள் விஷயத்தில் காட்டப்படவேண்டிய கருணையை காட்டவில்லையானால் கருணைக்குள்ள பெருமையைக் கட்டுப்படுத்துவதாகும். காருண்ய கவர்ன்மெண்டார் என்பதற்கு இத்தகையவர்களிடத்தில் காட்டும் கருணையை முன்னிட்டே அப்படி அழைப்பதாகும்.

ஆகையால் மேற்சொன்ன காரணங்களால் இவ்விரு நாடகமணிகள் விஷயத்திலும் சர்க்கார் கருணைகாட்டி அவர்களை விடுதலை செய்வதால் சர்க்காருக்கும் குடிமக்களுக்கும் ஷை நாடகமணிகளுக்கும் மகிழ்வடையக்கூடிய இன்பமுண்டாகும். ஆகையால் சர்க்கார் இவர்கள் விஷயத்தில் கருணைகாட்டி விடுதலை செய்யவேண்டும்.

## இயக்கச் செய்திகள்.

27-1-46ல் பம்பாய் தாராவியில் திராவிட நாடு பகுத்தறிவு நிலையத்தின் மாதாந்திரக் கூட்டம் தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் நடைபெற்றது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் தோழர் எஸ். பெரியசாமியைத் தலைவராகவும், எஸ். சிவன் செயலாளராகவும் கொண்ட நிர்வாகக்குழு 3-வது வருடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கூட்டம் இனிது முடிவுற்றது.

o o

3-1-46ல் நீடாமங்கலத்தில் திராவிடர் கழகம், திராவிட மாணவர் கழகம், ஆகியவைகளின் சார்பில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், இரா. இளம்வழுதி, பி. சனார்த்தனம், டி. கே. சீனிவாசன், சாமி, குழந்தையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

27-1-46ல் மதுரை வடுகக்காவல் கூடத்தெருவில் கறுப்புச்சட்டைப்படையின் நிர்வாகக்குழுக் கூட்டம் தோழர் கே. எஸ். ராசமான் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் "கறுப்புச்சட்டைப்படை" மாகாண மாநாட்டை மதுரையில் நடத்தத் தலைவர்களின் அனுமதியைக் கோருவதென்றும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

o o

27-1-46ல் சிறுத்தொண்ட நல்லூரில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சிவசங்கு திராவிடக் கொடியை ஏற்றி வைத்துச்சொற்பொழி வாற்றினார்.

o o

28-1-46 மாலை பட்டுக்கோட்டை திராவிட மாணவர் கழகத்தின் சார்பில் ஒரு கூட்டம் தோழர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது "இளைஞர் உள்ளம்" என்பதுபற்றிப் பல தோழர்கள் சொற்பொழி வாற்றினர்.

* *

27-1-46 இரவு 8-மணிக்கு திண்டிவனம் திராவிடர் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. 1946-ம் ஆண்டிற்குத் தோழர் டி. எ. எஸ். பழனி அவர்களைத் தலைவராகக் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டு, கழக 2 வது ஆண்டுவிழா நடத்த ஏற்பாடு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

* *

நாகை வெளிப்பாளையம் மணி பகுத்தறிவுக் கழக சார்பிலும் நாகை திராவிடர் கழக சார்பிலும் 3-2-46ல் தோழர் டி. கே. விசயராகவலு தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் டி. பி. ஆறுமுகம், டி. கே. சீனிவாசன், எ. கே. பாட்சா ஆகியோர் பேசினர்.

## வேண்டுகோள்

கோவை திராவிடர் கழகத்தில் அங்கத்தினராகச் சேருவோர் கீழ்க்கண்ட தோழர்களிடம் பதிவு செய்து கொள்ளும்படி தோழர் எஸ். எ. ராஜமாணிக்கம் தெரிவிக்கிறார். இரா. நெடுஞ்செழியன், அவனாசி ரோடு. சி. ராசகோபால், சாரதா பெண்பாடசாலை வட்டாரம். பி. பாலசுந்தரம், ராஜவீதி. ஆசிரியர் பெருமாள், செல்வபுரம். ஆறுமுகம் புலியகுளம். எஸ். எ. ராஜமாணிக்கம், ரங்கே கவுண்டர் வீதி.

o o

நாகையில், கறுப்புச்சட்டைப் படையில் சேர விரும்புவோர் கீழ்க்கண்ட இடத்தில் தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ள வேண்டுகிறேன். பி. கே. பக்கிரிசாமி, டைலர், அந்திக்கடைச் சந்து.

o o

காஞ்சிவரத்தில், பிள்ளையார்பாளையம் திராவிடர் கழகத்தின் சார்பில் அமைக்கப்படும். கறுப்புச் சட்டைத் தொண்டர் படையில்சேர விரும்புவோர், அக்கணம்பாளையத் தெருவில் உள்ள மேற்படி கழகத்தில் வந்து தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளும்படித் தோழர்கள் அ. ஐயம்பெருமாள், எ. கோவிந்தன் இருவரும் கேட்டுக்கொள்கின்றனர்.

o o

மருத்துவத் தோழர்கட்கு,

வாராந்திரவிடுமுறைச் சட்டத்தைப் பிரதி "செவ்வாய்க்கிழமை" தோறும் வைத்துக்கொள்கிறோமென்று, 19-1-46 தேதி மாகாணத் தொழில் கமிஷனருக்கு எழுதியிருந்தோம். 29-1-46ல் நம் கோரிக்கையை ஒப்புக்கொண்டு அவரிடமிருந்து பதில் கிடைத்துவிட்டது. ஆகவே சென்னை மாகாண மருத்துவத் தோழர்கள் அனைவரும், செவ்வாய்க்கிழமை தோறும் தங்கள் தொழிற்சாலைகளை மூடவேண்டுமாய் மாகாண மருத்துவர் சங்க அமைப்பாளர்கள் இ. மாணிக்கம், வீ. பெருமாள் ஆகிய இருவரும் வேண்டிக்கொள்கின்றனர்.

o o

வடசென்னை நகரில் உள்ளவர்கள் கறுப்புச்சட்டைப்படையில் சேர விரும்புவோர் கீழ்க்கண்டமுகவரியில் தங்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு உதவி சேப்டன் தோழர் எஸ். ஆர். சாண்டோ வேண்டிக்கொள்கிறார். முகவரி. மீன் பிடிப்போர் கிளைச்சங்கம் சூரிய நாராயணசெட்டி தெரு, காசிபுரம், ராயபுரம் சென்னை.

o o

சென்னைத் தோழரீர்!

சென்னையில் திராவிடர் கழக உருப்பினர் இரசீது புத்தகங்கள் கீழ்க்கண்டவர்களிடம் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது

அந்தந்த வட்டத்திலுள்ள தோழர்களும், மாணவர்களும் தயவு செய்து இன்றே பெற்றுக்கொள்ள வேண்டப்படுகிறது.

என். வி. நடராசன், 18, பெருமாள் முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

என். எம். சுப்ரமண்யம், 50 நாராயணப்ப நாயக்கன் தெரு வண்ணாரப்பேட்டை.

கே. கோவிந்தசாமி, 5, காளப்ப ஆச்சாரி தெரு பி. டி. மதராஸ்.

என். எஸ். தங்கரூபன் 70/10, செல்லப்ப முதலி தெரு, ஒட்டேரி,

டி. திராவிட அரசு, நெ. 3, சுப்ரமண்ய செட்டித் தெரு, திருவல்லிக்கேணி.

## திராவிடநாட்டுச் செய்திகள்

6-1-46 ஞாயிற்றுக்கிழமை பெங்களூரில் ஆதிதிராவிட மக்களின் முதல் மாநாடு தோழர் எம். மாரி தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் சமூக முன்னேற்றம்பற்றிப் பேசினர். இவ்வூரிலுள்ள அரிஜன சேவா சங்கத்தைக் கண்டித்தும், ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கும் இடங்களுக்குத் தங்கள் சமூகத் தலைவர்கள் பெயரையே கொடுக்க வேண்டுமென்றும், 10,000 ரூபாய் சமூக வளர்ச்சிக்கு நன்கொடையளித்த தோழர் எஸ். கே. தருமலிங்கம் பிள்ளைக்கு நன்றி தெரிவித்தும் மற்றும் பல முன்னேற்றத்திற்குரிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

o o

தஞ்சை மருத்துவர் சங்கப் பொதுக் கூட்டம் 19-1-46ல் தோழர் ரெத்தினசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் கதிர்வேல், அமிர்தத்தம்மாள் மறைவுக்கு அநுதாபம் தெரிவிக்கப்பட்டது.

o o

3-1-46ல் அறந்தாங்கியல்நடைபெற்ற, மருத்துவ சங்கக் கூட்டத்திற்குத் தோழர் கே. வைத்தியநாதன் தலைமைவகித்தார். தோழர்கள் பலர்சமூகமுன்னேற்றம் பற்றிப் பேசினர். பின் தோழர் பழைய பட்டக்காரர் மரணத்திற்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

o o

26-1-46ல் கே. பேட்டைப் பொது மன்றத்தின் முன்னிலையில் குளித்தலைத் தாலுகா, ஷெடியூல்ட் கிளாஸ் பெடரேஷன் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் டி கே. சுப்ரமண்யம் தலைவராகவும், எ. சுப்ரமண்யம் செயலாளராகவும், பல கமிட்டி அங்கத்தினர்களும் கொண்ட நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

3-1-46-ல் சிந்தாமணியில் (சங்கரன் கோவில் தாலுகா) நெல்லைத் தோழர் வி. எஸ். சங்கர சுப்ரமண்ய முதலியார் பி. எ. பி. எல். தலைமையில் செங்குந்தர் வாலிபர் சங்கத்தைத் தோழர் டி. பி. கே. எ. சேதுராமலிங்கமுதலியார் பி. எ. திறந்துவைத்தார். பலர் சமூக முன்னேற்றமும், சீர்திருத்தமும்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுத் தோழர் எஸ். கே. ராமசாமி முதலியாரைத் தலைவராகக்கொண்ட நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டுக் கூட்டம் இனிது முடிவுற்றது.

o o

1-2-46ல் ஸ்ரீராம சமுத்திரம் விவசாயிகள் சங்கத்தின் சார்பில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்காக விவசாயிகள் வேலைக்குச் செல்லவில்லை. இதைக்கண்ட பார்ப்பனர்கள் வேறு ஆட்களைக்கொண்டு அறுவடை செய்ய, சங்கத்தின் சார்பாகத் தோழர்கள் ஆர். இராசகோபால், வி. மாரிமுத்து எம், திருமலை மூவரும்சென்று அதைத் தடுத்தனர். பிறகு அவ்வயல் முன்சீப் விவசாயிகள் ஒற்றுமையைக்கண்டு ஒன்றும் செய்யமுடியாமல் போய்விட்டார். பிறகு தோழர் சின்னையாக்கொத்தனார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பார்ப்பனரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் வித்தியாசமின்றிக் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

o o

2-2-46ல் ஈரோடு மருத்துவர் சங்கக் கூட்டம் தோழர் வெங்கிடாசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். ரங்கசாமி, எ. கருமலைசாமி, பி. பெருமாள் ஆகியோர் பேசியபின் தோழர் ஜி. கே. கருப்பையா நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

o o

பிச்சாண்டார் கோயில் ஷெடியூல்டு வகுப்பு இளைஞர் கழக சார்பில் தோழர் எம் சிங்காரம் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் பொன்னன் பி. எ, கருணாகரன் பி. எ, டி. ராஜன் ஆகியோர் பேசினர்.

o o

கோவிலூரில் 1-2-46 மாலை தோழர் திருவெண்காடு டி. பி. சுப்ரமணியம் தலைமையில் இசைவேளாளர் பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர் டி. என். இராஜாங்கம் கொடியேற்றினார். தோழர்கள் லெட்சப்பா, மகாதேவன், தங்கவேல், குஞ்சிதபாதம் ஆகியோர் பேசினர்.

o o

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.